யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் நான்கு

விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 216 ஆங்கிரச ஆனி 16 30.06.1992 செவ்வாய்


## சார்க் செயலர்கள் கூட்டத்தில் டிக்ஸிற் கலந்து கொள்ளார்

எதிர்வரும் ஜூலை ஐந்தாம் திகதி முதல் ஏழாம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ள சார்க் நாடுகளின் வெளியுறவுச் செயலர்களின் கூட்டத்தில் இந்திய வெளியுறவுச் செயலர் ஜே. என். டிக்ஸிற் தாம் கலந்து கொள்ள முடியாதிருப்பதாக அறிவித்துள்ளார். ஜூலை எட்டாம், ஒன்பதாம் திகதிகளில் நடைபெறவுள்ள வெளியுறவு அமைச்சர்களின் மாநாட்டுக்கு முன்னோடியாகவே வெளியுறவுச் செயலர்களின் கூட்டம் நடைபெறவுள்ளது. வெளியுறவுச் செயலர்களின் கூட்டத்தில் டிக்ஸிற்றுக்குப் பதிலாக முன்னாள் —04 ஆம் பக்கம் பார்க்க

# புலிகள் அழிக்கப்பட்டால் அதுவே தமிழர்களின் இறுதி முடிவாகிவிடும்

## இருதமிழ்க்குழு உறுப்பினர்கள் எச்சரிக்கை

விடுதலைப் புலிகள் அற்ற நிலையில் அரசியல் ரீதியாக அதுவே தமிழர்களின் இறுதி முடிவாகிவிடும். இவ்வாறு எச்சரித்துள்ளனர் கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களில் அங்கம் வகிக்கும் இரு தீவிர போக்குள்ளவர்கள்.

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் அழிக்கப்பட்டால் அது அரசியல் ரீதியாக தமிழர்களின் இறுதி முடிவாகிவிடும் என ஏழு தமிழ்க்குழுக்களில் அங்கம் வகிக்கும் இரண்டு தீவிரப்போக்கு சக்திகள் கருதுகின்றன என கூறப்படுகிறது.

இந்த இருவரது கருத்துக்கள் பற்றி குழுவிலுள்ள ஏனையோர் அதிருப்தியடைந்துள்ளனராம்.

இந்த இருவரில் ஒருவர் எந்தத் தமிழரும் இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கக் கூடாது எனக் கருதுகிறாராம். அதனால் மற்றையோரை அரசாங்கத்துக்கான ஆதரவை வாபஸ் பெறும்படி கோரிவருகிறார் எனவும் கூறப்படுகிறது.

## அரசியல் தீர்விற்கு முன்பாக புலிகளை தோற்கடிக்க வேண்டுமாம்

வடக்குக் கிழக்கு பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பதற்கு முன்பு விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க வேண்டுமென சிறிலங்காவின் அரசியல் மற்றும் இராணுவத் தலைமைத்துவங்கள் விரும்புகின்றன என சண்டே ஐலண்ட் செய்தியொன்று கூறுகின்றது.

அரசியல் தலைமைத்துவம் விரும்புகிறது போல இவ்வருட இறுதிக்குள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான சாத்தியங்களை அதிகரிப்பதற்கு இவ்வாரத்தில் இராணுவம் குறிப்பிடத்தக்க வெற்றிபெற முயலும் எனவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு கடந்த வாரம் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை பலப்படுத்தும் மூலமாக மேலும் பல இராணுவத்தினரும், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும், இராணுவ உபகரணங்களும் வடபகுதி தளங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அச்செய்தி கூறியது.

## வெற்றிலைக்கேணிப் படை கடும் ஷெல் தாக்குதல்

வெற்றிலைக்கேணியிலிருந்து முதற்கட்டமாக படையினர் முன்னேற எடுத்த முயற்சி நேற்று முன்தினம் முறியடிக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று முழுநாளும் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு முகாம்களிலிருந்து கடும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

புல்லாவெளிப் பகுதியில் விமானக் குண்டு வீச்சுகளும் இடம்பெற்றுள்ளன. மாலை வரை இத்தாக்குதல்கள் நீடித்தன. அவ்ரோ, பொம்மர்கள், ஹெலி என்பன வான் தாக்குதலை மேற்கொண்டிருந்தன.

இதைத்தவிர பச்சிலைப்பள்ளி, இயக்கச்சிப் பகுதிகளிலும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. (07)

## புல்லாவெளி மோதலில் 14 படையினர் பலியாம்

வெற்றிலைக்கேணி புல்லாவெளிப்பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் படையினர் தரப்பில் 14 பேர் பலியானதாகவும் 16 பேர்காயமடைந்ததாகவும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இதனிடையே இப்பகுதியில் —04 ஆம் பக்கம் பார்க்க

## புதிய தரப்படுத்தலைக் கண்டித்து மாணவர்களின் பெரும் பேரணி

1990 ஆகஸ்ட், 1991ஏப்ரல் மாதங்களில் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப்பரீட்சைகள் இரண்டையும் வெவ்வேறாக கருதி பல்கலைக்கழக அனுமதி புள்ளிகள் வித்தியாசமானவை என உயர் கல்வி அமைச்சர் அறிவித்துள்ளதை கண்டித்து நேற்று யாழ் நகரில் மாணவர்களின் ஆர்ப்பாட்ட பேரணி நடைபெற்றது.

காலை 11 மணியளவில் பல்கலைக்கழக முன்பாக ஆரம்பமான இப்பேரணி பலாலி வீதி, ஆஸ்பத்திரி வீதி, கண்டிவீதியூடாக யாழ் செயலகத்தையடைந்தது.

இரு பரீட்சைகளையும்மதிப்பீட்டு நோக்கத்திற்காக ஒரே பரீட்சையாக கருதுமாறும் கோரும் ஜனாதிபதிக்கான கடிதம் ஒன்று அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

செயலகத்திலிருந்து பின்னர் இப்பேரணி கச்சேரி நல்லூர் வீதி, நாவலர் றோட் வழியாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தை வந்தடைந்து மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

அதன் பின்னர் இப்பேரணி யாழ் பல்கலைக்கழகத்தைச் சென்றடைந்தது.

(47, 15, 06, 07, 25)

## மட்டக்களப்பு தாக்குதல் படையினர் காட்டில் தஞ்சம்

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் கிலுமிச்சை பகுதியிலிருந்து கள்ளியன்தீவு நோக்கி சென்ற இராணுவ ரோந்து அணி புலிகளின் கடும் தாக்குதலினுள் சிக்கியது.

ரோந்துப்படையினரை கள்ளியன்தீவில் வழிமறித்து புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலினால் படையினர் நிலைகுலைந்து பலத்த இழப்புகளுடன் அருகிலுள்ள காடுகளினுள் தப்பியோடினர்.

படையினருக்கு உதவ ஹெலிகப்டர் ஒன்று இப்பகுதியில் தாக்குதல் நடத்தியது.

இவ்வெற்றிகரத் தாக்குதலில் புலிகள் தரப்பில் 2 ஆம் லெப். தங்கேஸ் (பே. தங்ககுமார் குருமண்வெளி) வீரச்சாவு எய்தினார்.

இத்தாக்குதல் குறித்து ...04 ஆம் பக்கம் பார்க்க

## ஊரியானில் பயணிகள் மீது ஹெலிகப்டரிலிருந்து சூடு

நேற்று மாலை 5 மணியளவில் ஊரியான்பகுதியில் ஹெலிகப்டரில் இருந்து பயணிகள் மீது கண்மூடித்தனமான துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் கொழும்பிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் வந்த பயணிகள் அங்கும் இங்கும் சிதறி ஓடினர்.

சுமார் ஒருமணிநேரமாக துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. சிலமணி நேரத்தின் பின்னர் பயணிகள் தமது பயணத்தை தொடர்ந்தனர். (17

## கடற்படை மீது தாக்குதல் நடத்த உத்தரவாம்

கடற்படைக்கப்பல்கள் மீது தாக்குதல்களை அதிகரிக்குமாறு விடுதலைப்புலிகள் தமது கடற்புலிகளுக்கு உத்தரவிட்டிருப்பதாக இராணுவ உளவுத்துறை தெரிவித்ததாக கொழும்புப்பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அராலி, மாதகல் பகுதிகளில் அதிகரித்த புலிப் போராளிகள் குவிக்கப்படுவது கடற்படைக் கெதிரான தாக்குதல் திட்டத்தின் ஒரு பகுதியாகுமெனவும் இராணுவ உளவுத்துறை கூறியுள்ளதாம்.

## இந்திய புலனாய்வுக் குழு கொழும்பு வர அனுமதியில்லை

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவும், புலிகள் தலைவர் பிரபாகரனை நாடுகடத்துவது குறித்தும் பேச்சுநடத்தவும் கொழும்பு வரவிருந்த மூன்றாவது இந்திய மத்திய புலனாய்வுக் குழுவுக்கு ஸ்ரீலங்கா அரசு அனுமதி மறுத்துள்ளது.

பிரபாகரனை ஒப்படைக்கும்படி இந்தியா முறைப்படி வேண்டுகோள் விடுக்காததினால் இந்திய புலனாய்வுக் குழு இது தொடர்பாக கொழும்பு வருவதை அனுமதிக்க முடியாது என ஸ்ரீலங்கா அரச தரப்பில் அறிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா அரசின் இந்த அறிவிப்பு குறித்து இந்திய வெளியுறவு அமைச்சு அதிருப்தி தெரிவித்துள்ளது.

## அல்ஜீரிய ஜனாதிபதி சுட்டுக் கொலை

வட ஆபிரிக்க நாடான அல்ஜீரிய ஜனாதிபதி முகமட் பூதியா (73) நேற்று துப்பாக்கி நபர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கலாசார நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக இவர் கிழக்கு பகுதி நகரான அனபாவிற்கு வந்த போதே சூட்டுக்கு இரையானார்.

1981 இல் எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் கொலையின் பின் முஸ்லிம் நாடுகளில் நடைபெற்ற உயர் தலைவர் கொலை இது வென்பது குறிப்பிடத்தக்கது.

அல்ஜீரிய ஜனாதிபதி கொலைக்கு காரணம் ஏதும் உறுதிசெய்யப்படவில்லை. இவ்வாண்டு ஜனவரியிலேயே இவர் அரசத்தலைவராக பதவி ஏற்றிருந்தார்.

# கட்டைக்காடு யுத்தத்தில் 5400 படையினர்!

வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பகுதிகளிலிருந்து ஆனையிறவை நோக்கி மேற்கொள்ளப்படும் 'ஒபரேஷன் பலவேகய—11' என அரசால் பெயரிடப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையில் சுமார் 5400 படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கொழும்பில் கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இப்படையினர் கடல் மார்க்கமாக வெற்றிலைக்கேணியில் தரையிறக்கப்பட்டு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் கவச வாகனங்களும் பயன்படுத்தப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அங்கு படையினர் மெதுவாகவே நகரக் கூடியதாக உள்ளதாகவும் அப்படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

## முழு நடவடிக்கைகளிலும் பத்து ஆயிரம் படையினராம்!

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் தற்போதைய இராணுவ நடவடிக்கையில் 10 ஆயிரம் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக நேற்று வெளியான 'லங்கா தீப' என்னும் சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

## வெள்ளி வரை இனப்பிரச்சினை தெரிவுக்குழு அமர்வுகள்

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக்குழு நேற்று மீண்டும் கூடியது. இத் தெரிவுக்குழு அடுத்த வெள்ளிக் கிழமை வரை தொடர்ந்து தனது கூட்டங்களை நடத்தும்.

இந்த அமர்வுகளில் ஜூன் மாதம் பதினேழாம் திகதி தெரிவுக்குழு உறுப்பினர்களிடம் கையளிக்கப்பட்ட ஆலோசனை அறிக்கையும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பிலும், ஏழு தமிழ்க் குழுக்கள் சார்பிலும், கிராமிய கைத்தொழில் அமைச்சர் எஸ். தொண்டமான் தாக்கல் செய்த ஆலோசனைகளும் தீவிரமாகப் பரிசீலிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது

## தெரிவுக்குழுவின் தீர்வு ஒருமாதத்துக்குள் முன் வைக்கப்படும்

இனப்பிரச்சினைத் தீர்வுத் தெரிவுக்குழு ஒரு மாத காலத்துக்குள் தனது தீர்வு யோசனையை முன்வைக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த திங்கள் முதல் குழு தினமும் கூடி தீர்வு யோசனைகளை ஆராய்ந்து வருவது தெரிந்ததே.

## அதிருப்தியாளர்களால் எம்மை பணியவைக்கவே முடியாது!

### - ஜனாதிபதி

இவ் வருட இறுதிக்குள் வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமெனப் புத்தளையில் நடைபெறும் கம் உதாவ கூட்டத்தில் உரையாற்றுகையில் ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவித்தார்.

"ஜே.வி.பி பயங்கரவாதிகளால் கூட எம்மைப் பணிய வைக்க முடியவில்லை. முதுகெலும்பில்லாத கோழைகளா எம்மைப் பணிய வைக்கப் பார்க்கிறார்கள்? அது ஒரு போதும் நடக்காது' எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

முழு செலும்பில்லா கோழைகள் என ஐ.தே.கவிலிருந்து பிரிந்து சென்ற அதிருப்தியாளர் குழுவையே ஜனாதிபதி சாடினார் எனவும், சமீப நாட்களாக அவர்களை ஜனாதிபதி தனது பகிரங்க உரைகளில் கடுமையாகச் சாடி வருகிறார் எனவும் தென்பகுதி சஞ்சிகை ஒன்று விமர்சித்துள்ளது.

## கின்னஸில் இடம்பிடிக்க சென்னையில் இசை நிகழ்ச்சி!

உலக சாதனையை முறியடிக்க மூன்று இளைஞர்கள் 300 மணிநேர தொடர் இசை நிகழ்ச்சியை சென்னையில் ஆரம்பித்துள்ளனர்

1986 இல் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த சதாக் ஷரீப் என்பவர் 131 மணிநேரம் தொடர் இசை நிகழ்ச்சி நடத்தி சாதனை புரிந்துள்ளார்.

## நியமனம் முதல் ஓய்வு பெறும் வரை ஒரே பாடசாலையிலேயே சேவை!

தற்போது நடைமுறையிலுள்ள ஆசிரிய இடமாற்ற நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவர அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

இதன்படி இனிமேல் ஒரு ஆசிரியர் தான் முதலில் நியமிக்கப்படும் பாடசாலையிலேயே ஓய்வூதியக் காலம் வரை சேவையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரபல கேடி 'வண்சொட்' பொலிஸாரால் சுட்டுக்கொலை!

நான்கு வருடங்களுக்கு முன் சிறையிலிருந்து தப்பிய பிரபல கேடி ஒருவர் பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பல கொள்ளை, கொலைகள் தொடர்பாகத் தேடப்பட்டு வந்த 'செனிவிரத்ன' 'வண் சொட்' என அழைக்கப்படுபவரே நேற்று முன்தினம் கொல்லப்பட்டவராவார்.

## மாணவர் சங்க தேர்தல்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக பீட மாணவர் சங்கத் தேர்தல் யூன் மாதம் 30 ஆம் திகதிக்கும் யூலை மாதம் 7 ஆம் திகதிக்குமிடையே நடைபெறவுள்ளது.

திறந்த பல்கலைக்கழகத்தில் பதிந்துள்ள வாக்களிக்கத் தகுதியுள்ள எல்லா மாணவர்களுக்கும் அவரவர் வாக்களிக்கத் தகுதியான எல்லாப் பத்திரங்களும் அடங்கிய 'தேர்தல் பொதி' பதிவுத் தபாலில் பல்கலைக்கழகத்திலுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் அறிவித்துள்ளார்.

## புதிய தலைவர்கள் தெரிவு

புனித பிரான்சிஸ்கன் மறை பரப்பு சபையின் புதிய தலைவராக இந்தியாவைச் சேர்ந்த அதி வண. சிரேஷ்ட சகோதரர் ஜோசப் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை புனித பிரான்சிஸ்கன் மறைபரப்பு சகோதரர்களின் பிராந்திய புதிய சிரேஷ்ட சகோதரராக அருட் சகோ ஜெரமி கிறிஸ்ரியும் ஆலோசகர்களாக அருட். சகோ. செ. ஜோபிதாஸ், அருட் சகோ ஜஸ்ரின், அருட் சகோ. கிறேசியன் ஆகியோரும் தெரிவானார்கள். (16)

## கதிர்காமம் உற்சவம்

கதிர்காமம் வருடாந்த உற்சவம் நாளை ஜூலை மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகிறது 15ஆம் திகதி மாணிக்க கங்கையில் நீர் வெட்டுதலுடன் உற்சவம் நிறைவு பெறும்.

## பௌத்த காங்கிரஸ் தலைமையை லலித்துக்கு வழங்க முயற்சி

அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் தலைமைக்குத் திரு. லலித் அத்துலத் முதலியை நியமிக்க முயற்சி எடுக்கப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் பதவிக்கு அரசியல்வாதி ஒருவர் நியமனமாவதற்குப் பௌத்த காங்கிரஸின் சட்ட திட்டங்கள் இடம் கொடுக்காத போதிலும் அரசியல்வாதியும் தலைமைப் பதவிக்கு நியமனமாகும் வகையில் அச் சட்ட திட்டங்களைத் திருத்தவும் சிலர் முயற்சியெடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜூலை 12 ஆம் திகதி பௌத்த காங்கிரஸின் மகாநாடு கூடவுள்ளது.

## கொழும்புபல்கலைக்கழக மாணவி கடத்தப்பட்டுக் கொலை!

கொழும்பு பல்கலைக் கழக மாணவியொருவர் கடத்தப்பட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் இரத்தினபுரியில் நிகழ்ந்துள்ளது. கொழும்பு பல்கலைக் கழக மாணவியான இவர் இரத்தினபுரியிலுள்ள கிரிஎல்ல வத்தையில் தனது வீட்டிலிருந்த வேளை இனந்தெரியாதோரால் கடத்தச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவரது சடலம் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டது.

## அ.தி.மு.க. ஊர்வலத்தில் பொய்க்கால் குதிரையாட்டம்

அ.தி.மு.கவின் மகாநாட்டு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக மதுரையில் நேற்று முன்தினம் மாபெரும் ஊர்வலமொன்று நடத்தப்பட்டது.

இந்த ஊர்வலத்தில் யானைகளும், கட்சித் தொண்டர்களை ஏற்றிய குதிரைகளும் பங்குபற்றின. பொய்க்கால் குதிரையாட்டமும் இந்த ஊர்வலத்தில் இடம் பெற்றது.

## கடும் வெய்யிலினால் 4 மணி நேரம் பயணிகள் அவதி

வவுனியா ரயில்சேவை தற்போது தாண்டிக்குளம் வரை நீடிக்கப்பட்டுள்ள போதிலும் கொழும்பிலிருந்து வடபகுதி செல்லும் பயணிகள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாண்டிக்குளம் ரயில் நிலையத்தில் இறங்கும் பயணிகள் உடனடியாக அந்த ரயில் நிலையத்தைக் கடந்து செல்ல அனுமதி வழங்கப்படவில்லை

தாண்டிக்குளம் ரயில் நிலையத்தில் கூரை அமைக்கப்படாத காரணத்தினால் பயணிகள் நான்கு மணி நேரத்திற்கும் மேலாக அங்கு வெய்யிலில் காடவேண்டியுள்ளது,

## பிரச்சினைகளை அணுகும் முறையில் மாற்றம் அவசியம்

### - அமைச்சர் செல்லச்சாமி

நாட்டில் தோன்றியுள்ள பிரச்சினைகளை அணுகும் முறையில் மாற்றம் தேவை என அமைச்சர் செல்லச்சாமி கேட்டுள்ளார்.

நாட்டில் தற்பொழுது நிலவும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படாவிட்டால் அவை விஸ்வரூபமெடுத்துவிடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

## மாகாண சபைக்கு மேலும் அதிகாரங்கள்

மாகாணசபைகள், உள்ளூராட்சி சபைகளுக்கு மேலும் அதிகாரங்கள் வழங்கத் தயாரென ஜனாதிபதி பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தெரிவுக்குழு இதற்கான சிபாரிசினை வழங்கியுள்ளது. அதனை அமுல்படுத்த நாம் தயாராகவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## ★ தமிழகம் அண்ணாமலை நகர் பொலிஸ் நிலையத்தில் குண்டு வெடிப்பு!

தமிழகத்தில் சிதம்பரத்துக்கு அருகே அண்ணாமலை நகர் பொலிஸ் நிலையத்தில் சக்திவாய்ந்த குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று நிகழ்ந்ததாக அறிவிக்கப்படுகிறது.

இப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை நிகழ்ந்த இச் சம்பவத்தில் நான்கு சான்றிதழ்கள் (?) காயமடைந்ததாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இவர்களில் ஒருவர் சிதம்பரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸ் நிலையத்தின் கட்டிடப் பகுதி ஒன்று இச் சம்பவத்தில் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மதுரையில் அ.இ.அ.தி.மு.கட்சியின் மாநாடு மிகப் பிரமாண்டமான விதத்தில் நடைபெறும் வேளையில் பொலிஸ் நிலையத்தில் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளதானது பொலிஸ் துறையினருக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இது இவ்வாறு இருக்க இப் பொலிஸ் நிலையத்தில் தான் சமீபத்தில் (2.6.92) காவலில் இருந்த ஒருவர் மரணமானார் என்பதும், அவரது மனைவி மானபங்கப்படுத்தப்பட்டார் என்பதும் இச் சம்பவங்கள் பெரும் பரபரப்பைத் தமிழகத்தில் ஏற்படுத்தியதை யடுத்து ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கவை.

இப் பகுதியில் வெடிக்காத குண்டு ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டதாகப் பிந்திய தகவல் தெரிவித்தது.

## ராஜீவ் காந்தி கொலை வழக்கு

# இந்தியா அங்கீகரித்தாலே மோதிலால் ஆஜராகலாம்

"எனக்கு இருக்கும் பிரச்சினை இந்திய நீதிமன்றங்களில் ஆஜராக எனக்கு உரிமையில்லை. ஆகவே இவர்கள் சார்பில் எப்படி நான் வாதாட முடியும் என்ற கேள்வி எழுகிறது.

"இந்தத் தடை நீக்கப்படும் வரை நான் தமிழ் நாடு செல்வது பிரயோசனமற்றது" என ராஜீவ் காந்தி கொலை வழக்கு எதிரிகள் 16 பேர்கள் சார்பில் ஆஜராகும்படி பெயர் குறிப்பிடப்படாத சிலரால் அணுகப்பட்ட பிரபல வழக்கறிஞர் மோதிலால் நேரு சண்டே டைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

"நான் ஒரு இனாதிபதி வழக்கறிஞர். அரசியலமைப்பின்படி இராணி வழக்கறிஞர் தரத்துக்கு உரிய உரிமைகள் ஜனாதிபதி வழக்கறிஞர்களுக்கு உண்டு. இந்திய இராணி வழக்கறிஞர்களை அங்கீகரிப்பதால் ஜனாதிபதி வழக்கறிஞர்களையும் அங்கீகரிக்க வேண்டும்" என்று கூறிய மோதிலால் நேரு, இது தொடர்பாக தமிழ்நாடு வழக்கறிஞர் சங்கத்துடன் தாம் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

"இந்த விடயம் தெளிவு செய்யப்பட்ட பின்பே நான் இந்தியா செல்ல முடியும்" என்று கூறிய மோதிலால் நேரு தாம் திரு பிரபாகரன் சார்பில் வாதாட மாட்டார் எனவும் தெரிவித்துள்ளார்.

விசேட புலனாய்வுக் குழுத் தலைவர் கார்த்திகேயனின் கூற்றுப்படி இந்த வழக்கு ஆகஸ்ட் மாதத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## நாடு கடத்தல் விவகாரம்

# இந்திய சட்டத்துறைக் குழு இப்போது வராது

விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனை இந்தியாவுக்கு நாடு கடத்துவது தொடர்பாக சிறிலங்கா வரவிருந்த இந்திய சட்டத்துறைக் குழுவினர் 'நிச்சயமாக இப்பொழுது வரமாட்டார்கள்' என இந்திய உயர்ஸ்தானிகர் ஜா தெரிவித்துள்ளார்.

அண்மையில் சென்னை சென்றுவந்த திரு. ஜா தமது விஜயம் இது தொடர்பானது அல்ல எனவும் தெரிவித்தார்.

இவ் விடயம் சம்பந்தமாகக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி வழக்கறிஞரும் உயர்மட்ட அரசியல்வாதியுமான ஒருவர் இந்தியக்குழு இங்கு வரத் தேவையில்லை என்றும் அப்படி அவர்கள் வந்து சட்டத்துறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தினால் சிறிலங்கா அரசு நாடு கடத்தலுக்கு மறைமுகமாக ஒப்புக் கொள்வதாக ஆகிவிடும் எனவும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

'தமது நாட்டிலேயே குற்றங்களுக்காகத் தேடப்படும் ஒருவர் அதற்காக தமது நாட்டில் விசாரணை செய்யப்படும் வரை நாடுகடத்த முடியாது என நாடுகடத்தல் சட்டங்கள் குறிப்பிடுகின்றன' என்று தெரிவித்த அவர், நாடு கடத்துவதாக முடிவெடுக்கப்படுதல் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகளைக் குழப்பியடிக்கும் எனவும் தெரிவித்தார்.

# பணம் பொருள் அபிவிருத்திக்கு வெளிநாட்டு நிதி உதவி

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட பிரிவு பணம் பொருள் அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆறு லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது.

பல்வேறு பணம் பொருள் உற்பத்தி தொழில்களை அபிவிருத்தி செய்வதே இதன் நோக்கமாகும்.

பணம் பொருள் உற்பத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் முயற்சியும் இதில் அடங்கியிருக்கும். தரமான உற்பத்திப் பொருள்களை அறிமுகப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கையில் பணம் பொருள் உற்பத்தியில் ஈடுபடுவோருக்கு அது தொடர்பான அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக இந்தோனேசியா, இந்தியா தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு பிரயாணம் செய்வதற்கான வாய்ப்பும் வழங்கப்படவுள்ளது.

# புலிகளின் ஆயுத களஞ்சியம் பம்பாயில் இல்லை

- மாநில அமைச்சர்

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆயுதக்களஞ்சியமோ அல்லது ஆயுத வழிபோக்கு நிலையமோ பம்பாயில் இல்லை என மகாராஷ்டிர மாநில உள்துறை இணையமைச்சர் பாபன்ராவ் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிரமாநில சட்டசபையில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

★ ரஷ்ய பத்திரிகை தகவல்

# ராஜீவ் குடும்பத்திற்கு முறைகேடான பணம்!

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் குடும்பத்திற்கு சர்வதேச வர்த்தக பேரத்துடன் சம்பந்தப்பட்ட முறைகேடான பணம் கிடைத்திருப்பதாக ரஷ்ய செய்திப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வர்த்தக பேரம் ராஜீவ்காந்தி உயிருடன் இருந்த வேளை மேற்கொள்ளப்பட்டதெனவும் அதற்கான தரகுப் பணம் தற்பொழுது அவரது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் உள்ளதாகவும் அப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஆனால் இக் குற்றச்சாட்டை காங்கிரஸ் ஐ. மறுத்துள்ளது.

★ பம்பலப்பிட்டியில் இரகசிய தடுப்பு நிலையம்

# ஆட்களைக் கடத்தி பணம் பறிக்கும் தமிழ்க் குழு!

கொழும்பில் ஆட்கடத்தல், பயமுறுத்துதல், பணம் பறித்தல் ஆகிய நடவடிக்கைகளில் தமிழ்க் குழுவொன்று ஈடுபட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கைய நடவடிக்கையில் ஈடுபட்ட குழுவொன்றை பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பம்பலப்பிட்டியில் வீடொன்றில் பொலிஸ் நிலையப் பாணியில் இவர்கள் ஆட்களைத் தடுத்து வைத்திருந்த இரகசியமும் தற்பொழுது அம்பலத்திற்கு வந்துள்ளது.

இந்த இரகசியக் கும்பலைச் சேர்ந்த ஆறு தமிழ் இளைஞர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்கள் வடக்கு கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்களெனவும் கூறப்படுகிறது.

வட்டிக்குப் பணம் கொடுக்கும் வர்த்தகர்கள், வேலை வாய்ப்பு முகவர்கள், வுகிகள் ஆகியோருக்கு சேர வேண்டிய பணத்தைச் செலுத்தத் தவறுவோரை இக் கடத்தற் கும்பல் கடத்திச்சென்று சேர வேண்டிய பணத்தை அறவிட்டுக் கொடுத்து வந்ததாம். இதற்கென முகவர்களிடமும், வர்த்தகர்களிடமும் இவர்கள் பணம் பெற்று வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆலோசனை கோரப்படுமாம்

அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாக மக்கள் மத்தியில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் தோன்றக் கூடுமெனவும் எனவே பல்வேறு கட்சிகள் குழுக்களிடமிருந்து இது தொடர்பாக மேலும் ஆலோசனைகள் வரவேற்கப்படவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சகல ஆலோசனைகளையும் நன்கு ஆராய்ந்ததன் பின்னரேயே இது குறித்து இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

தெரிவுக்குழுவின் சிபார்சுகளை அரசு எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## கரபந்தாட்ட சுற்றுப்போட்டி

அரியாலை திருமகள் சனசமூக நிலையம் அதன் 41 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்திவரும் சென் அப் முறையிலான கரபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற போட்டியில், கே.கே. எஸ். விளையாட்டுக் கழக அணியை மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணி இரு நேர் செற்றுகளில் 15:10, 15;12 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோற்கடித்தது. அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் இப்போட்டிகள் இடம் பெற்றன. (16)

## வெற்றி தோல்வி இல்லை

பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டித் தொடர் நேற்று முன்தினம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும், சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில், 17 வயதிற்கும், 15 வயதிற்கும் உட்பட்ட இரு பிரிவுகளுக்குமிடையில் இடம் பெற்ற இரு ஆட்டங்களும் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றன. 16

## விஞ்ஞான தினவிழா

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விஞ்ஞான மன்றம் நடத்தும் விஞ்ஞான தினவிழா இன்று 30 ஆம் திகதி மு.ப. 9 மணிக்கு கல்லூரி குமரசாமி மண்டபத்தில் நடைபெறும். இவ் விழாவில் இந்து விஞ்ஞானி' நூல் வெளியீடும் இடம்பெறும். பிரதம விருந்தினராக பேராசிரியர் இ.மகேஸ்வரன் (பீடாதிபதி விவசாயபீடம்-யாழ் பல்கலைக்கழகம்) கலந்து கொள்வார்.

## அம்பாள் ஆலய அலங்கார உற்சவம்

அரியாலை மேற்கு வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் நாளை முதலாம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறும்.

பதினோராம் நாள் (11-07-92) சங்காபிஷேகமும் மாலை கிராமப்பிரவேசமும் 12ஆம் திகதி ஞாயிறு மகேஸ்வர பூஜையும் இடம் பெறும்.

# தமிழ் வர்த்தகர்களை அச்சுறுத்தும் கோஷ்டி!

கொழும்பில் உள்ள தமிழ் வர்த்தகர்களிடம் பிறிதொரு கோஷ்டியொன்று அச்சுறுத்தி பணம் பறித்து வருவதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் தற்போதுள்ள சூழ்நிலையைப் பயன்படுத்தி இக் குழு பணம் பறித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

இது குறித்து செய்யப்பட்ட புகாரையடுத்து இக் குழு பற்றி விசாரணை செய்ய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இணங்கியுள்ளார்.

# இடைக்கால கவுன்ஸிலை முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்துமாம்

வடக்கு கிழக்கை நிருவகிக்க இடைக்கால கவுன்ஸில் ஒன்றை அமைக்குமாறு தாம் வற்புறுத்தப் போவதாக முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற தெரிவுக்குழுவிடமும் இதுகுறித்து முஸ்லிம் காங்கிரஸ் வற்புறுத்துமெனவும் தெரிவிக்கப்படுள்ளது.

# இந்திய, ஆஸி கிரிக்கட் அணிகள் இலங்கை வருகின்றன

அடுத்த வருடம் ஜூலை மாதம் இந்திய கிரிக்கட் அணி இலங்கைக்கு வரவுள்ளது.

இலங்கையில் பல போட்டித் தொடர்களில் கலந்து கொள்வதற்கு தென்னாபிரிக்க அணியும் விருப்பம் தெரிவித்துள்ளது.

அத்துடன் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் அவுஸ்திரேலிய கிரிக்கட் அணியும் இலங்கை வரவுள்ளது.

● இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தல்

# தெரிவுக்குழு ஆலோசனை இரண்டாவது கட்டம்

இனப் பிரச்சனைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் பதினேழாம் திகதிய கூட்டத்தில் கையளிக்கப்பட்ட எண்ணக் கருத்து அறிக்கை இரு கட்டங்களைக் கொண்டதெனத் தெரிய வருகிறது

முதலாவது கட்டம் வடக்கு-கிழக்கு தனித்தனி மாகாண சபைகள் அமைப்பது இரண்டு சபைகளின் வேலைத்திட்டங்களை இணைப்பதற்கும் திட்டமிடுவதற்கும் அமைக்கப்படும் மேல்நிலைச்சபை அமைப்பது ஒரு தேசிய சபை அமைப்பது என்பனவற்றை உள்ளடக்கியதாகும் இவை பற்றிய விவரங்கள் ஏற்கெனவே வெளிவந்துள்ளன,

இரண்டாவது கட்டம் பற்றிய விவரம் இப்போது வெளிவந்துள்ளது கருதொருமித்த தீர்வொன்றுக்கு தெரிவுக்குழு வருமானால் அதை அமுல் செய்யும் முறைகள் பற்றி இக் கட்டம் விவரிக்கிறது.

இதன்படி வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படும் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள அரசியல் கட்சிகள் வடக்கு கிழக்கில் சிவில் நிர்வாகத்தை நிறைவேற்றுவதற்கும் புனர்வாழ்வு புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளவும் இடைக்கால நிர்வாகத்திற்கு உறுப்பினர்களை நியமிக்கலாம்.

நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பிராந்தியத்தின் பல பகுதிகளிலும் நடைபெறும் வேலைகளை மேற்பார்வை செய்வதால் மக்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக்கொள்வர்.

படிப்படியாக ஏற்படுத்தப்படும் சமாதான நடவடிக்கைகளால் ஏற்படும் மாறிய சூழ்நிலை உதவி வழங்கும் நிறுவனங்களிடமிருந்து அதிகரித்த அபிவிருத்தி நிதிகளைப் பெற உதவும் எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும் சாத்தியமான தெரிவில் இடைக்கால நிர்வாகத்திற்குப் பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புக்கள் உருவாகி அவற்றின் பொறுப்புகளை ஏற்கும் இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட்டால் பாராளுமன்றத் தெரிவுக்குழு இணைப்பு மற்றும் மேற்பார்வைப் பணிகளை மேற்கொளளும்.

## திருடர் அகப்பட்டார்

கொழும்புத்துறை புகையிரத வீதியில் வீடொன்றில் நேற்று முன்தினம் திருடியபோது மடக்கி பிடிக்கப்பட்டு காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டார். (47)

## வீரச்சாவு

வெற்றிலைக்கேணிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற தாக்குதல்களில் அழகன் (செ இளங்கோ - சாவகச்சேரி) சிற்றம்பலம் (நெடுந்தீவு), சேரன் (கி. அன்ரனி ஹில் - கட்டைக்காடு), ஆகியோர் வீரச்சாவு எய்தினர்.

## முல்லைத்தீவு ஊரடங்கு நீக்கம்

முல்லைத்தீவில் அமுலில் இருந்த ஊரடங்கு நேற்று முதல் நீக்கப்பட்டதாக கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது எனினும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் ஊரடங்கு தொடர்ந்து அமுலில் உள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

★ முன்னாள் சிறிலங்கா வெளிநாட்டமைச்சு ஆலோசகர்

# இந்தியத் தூதுவர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட வேண்டும்

"எங்கள் ஜனாதிபதி அவரது வெளிநாட்டு அமைச்சர் மூலம் இந்தியத் தூதுவர் என். என் ஜா வை வாயை மூடிக்கொண்டு தனது வேலையைப் பார்க்கும் படி பணிக்க வேண்டும். அவர் அப்படிச் செய்ய முடியாவிடில் அடுத்த விமானத்தில் அவரை அனுப்புதல் வேண்டும்"

இவ்வாறு ஸ்ரான்லி ஜயவீர சண்டே ஒப்சேவரில் எழுதிய கட்டுரையில் கருத்து வெளியிட்டுள்ளார்.

திரு ஜயவீர சிறிலங்கா வெளிநாட்டமைச்சில் இந்திய விவகார ஆலோசகராக இருந்தவர்.

திரு. ஜா கொழும்பில் ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது "தமிழ்க் கட்சிகள் வடகிழக்கு இணைப்புக்குக் குறைந்த எதனையும் ஏற்க மாட்டார்கள்" எனக் கருத்துத் தெரிவித்ததே இந்தக் கண்டனத்துக்கே காரணமாகும்.

"இந்தியா தமிழர்களை பகடைக்காயாக வைத்து இந்த நாட்டில் தனது சொந்த நலன்களைப் பேணுவதிலேயே எண்ணும் கருத்துமாக இருக்கிறதென்பதை தமிழ்க் கட்சிகள் உணர்வார்கள் என எண்ணுகின்றேன்

எங்களைப் பிரித்து ஒற்றுமையின்மையைச் சாதகமாக்கி தன் வழிக்கு வராத எந்த அரசின் ஸ்திர நிலையையும் குலைப்பதே இந்தியாவின் நோக்கமாகும்

ஜே ஆருடன் செயற்படும் போது பிரபாகரனையும், விடுதலைப் புலிகளையும் உபயோகித்ததே இதற்குச் சரியான சான்றாக அமைகிறது. இந்தியாவின் உள்நோக்கத்தை அறிய வேறு சான்றுகள் தேவையில்லை"

பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடன் இந்தியா செயற்படும் விதம் இதற்கு மாறுபட்டதல்ல.

1987 இல் ஜே. என். டிக்சிற் என்ன வகையில் செயற்பட்டாரோ அதே வகையில் இப்போது ஜா வும் செயற்படுவதை ஜனாதிபதி பிரேமதாஸ அவதானித்து இருப்பார் என நம்புகின்றேன்.

இவ்வாறு திரு ஜயவீர அக்கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

இதனை விட குறைவான ஏற்க முடியாத நடத்தைக்காக பிரிட்டிஷ் தூதுவர் கிளாட்ஸ்ரோன் வெளியேற்றப்பட்டார். இரு சமூகங்களுக்கிடையில் சச்சரவை உருவாக்க வெளிப்படையாகவே செயற்படும் ஜா ஏன் வெளியேற்றப்படாது இவ்வாறு மேலும் கருத்து தெரிவித்துள்ளார்.

## சத்தங்கள் மத்தியில் ஊரியான் வழிப்பயணம்

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த பயணிகள் ஊரியான் பாதையைக் கடக்கும் போது ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து பரா வெளிச்சம் போடப்பட்டதாக வந்தவர்கள் தெரிவித்தனர்.

இதேநேரம் கட்டைக்காடு வெற்றிலைக்கேணிப் பகுதியிலுள்ள படையினரும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இதனால் பயணிகள் சறுக்கி விழுந்தும், ஓடியும் செய்வதறியாத நிலையில் வந்து சேர்ந்தனர். 07

## வேங்கைகளுக்கு அஞ்சலி

கட்டைக்காடு புல்லாவெளியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் படைகளுக்கும் கடுமையாக இடம்பெற்ற சமரின்போது முன்னேற முயற்சித்த படையினரை துரத்தியடித்து தன்னுயிரை இம்மண்ணுக்காய் நீத்த 8 வீரவேங்கைகளின் புகழுடம்புகள் யாழ்க்குடாப் பகுதியில் உள்ள மூன்று இடங்களில் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக நேற்று பிற்பகல் தொடக்கம் மாலை வரை வைக்கப்பட்டிருந்தன 07

## ஜனாதிபதியாக ராமோஸ் பதவியேற்பு

அண்மையில் பிலிப்பைன்ஸில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் பிடல் ராமோஸ் இன்று அந்நாட்டு ஜனாதிபதியாக பதவி ஏற்கிறார்.

இந்த பதவியேற்பு வைபவத்தில் பதவியிலிருந்து ஓய்வுபெறும் திருமதி கொரசோன் அக்கியூனோவும் பங்குபற்றுவார்.

★ சிங்களவர் பாதுகாப்பு அமைப்பு கூறுகிறது

## வடக்கு - கிழக்கு இணைப்பு புதிய ஆணை பெறவேண்டும்

மக்களிடமிருந்து புதிய ஆணையொன்றைப்பெறாமல் அரசாங்கம் வடக்கு கிழக்கு நிரந்தர இணைப்பை அனுமதிக்கமுடியாது எனவும், பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்வைத்த இரண்டு மாகாணசபைகளை இணைக்கும் மேல்நிலை சபை ஆலோசனை இரு மாகாணசபைகளின் நிரந்தர இணைப்புக்கு சமமானது எனவும் சிங்களவர் பாதுகாப்பு அமைப்பு கூறியுள்ளது.

நாட்டினதும் சகலரது சமூகங்களினதும் நலன்களை அடிப்படையாகக் கொண்ட இனப் பிரச்சினைக்கான நீண்டகால நிரந்தர தீர்வாக இந்த நாடு சகல பிரஜைகளினது தாயகமாக விருக்கவேண்டும் அவர்கள் எல்லாவகையிலும் சம உரிமை உள்ளவர்களாக விருக்கவேண்டுமெனவும் இவ்வமைப்பு கூறியுள்ளது.

மக்களில் ஒரு பகுதியினரையோ அல்லது நாட்டின் ஒருபகுதியையோ வேறுவிதமாக கணிக்கும் முறை இருக்கக் கூடாது என்றும் இவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

## கடற்புலிகளால் இராணுவ விநியோகங்களுக்கு ஆபத்து

கடற்பிராந்தியத்தில் விடுதலைப் புலிகளின் பயமுறுத்தல் மிகவும் ஆபத்தான யதார்த்தமாகும்

நாட்டின் மூன்றில் இரண்டு பகுதி கடற்பரப்பு வடக்குக் கிழக்கில் இருப்பதாலும் வடக்கிலுள்ள இராணுவத் தினருக்கான சகல விநியோகங்களும் கடல் மார்க்கமாகவே செய்யப்படுவதால் இது மிகவும் ஆபத்தான... என ஐலண்ட் பத்திரிகை... எழுதிய கட்டுரையில் ... குறிப்பிட்டுள்ளார்.

## தெரிவுக்குழுவின் அறிக்கை தமிழ்க் குழுக்கள் எதிர்க்கருத்து

இனப்பிரச்சினைக்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவினால் வழங்கப்பட்ட எண்ணக்கரு அறிக்கையின் கர்த்தா யார் என்பது பற்றி ஜூன் 22ஆம் திகதி நடைபெற்ற தமிழ்க்குழுக்களின் கூட்டத்தில் ஆராயப்பட்டதாம்

ஆனால் அதற்கு அங்கே விடை காணப்படவில்லையெனத் தெரிகிறது

இவ்வறிக்கையின் பல அம்சங்கள் மிகக் கடுமையாக விமர்சிக்கப்பட்டபின்பு இ... நிற்கான எதிர்ப்பை உ... தெரிவிப்பதா அல்லது ... வுக்குழுவின் முன் தெரி... பதா என்பது பற்றியும் தீ... விவாதம் நடைபெற்றதுள... தெரிவிக்கப்படுகிறது

இறுதியாக, ஜூன் 27 ஆம் திகதி நடைபெறும் தெரிவுக்குழுக் கூட்டத்திலே எதிர்க்கருத்துக்களை முன்வைப்பது என முடிவாகியது

## சேலத்தில் பாட்டாளி மக்கள் கட்சி வன்முறையில் இறங்கியது

பாட்டாளி மக்கள் கட்சி தொண்டர்கள் பொலிஸாரின் தடையை மீறி ஊர்வலம் சென்றதற்காக அவர்கள் அனைவரும் கைதாகினர்.

இதைத் தொடர்ந்து நேற்று சேலத்தில் பஸ் ஒன்று தீக்கிரையானது பலபஸ்கள் கல்லெறிக்குள்ளாகின இச்சம்பவம் தொடர்பாக மேலும் 30 பாட்டாளி மக்கள் கட்சி தொண்டர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## மட்டக்களப்பு...

செய்தி வெளியிட்ட கூட்டுப் படைத்தலைமையகம் மோதல்கள் ஆறு மணி நேரம் நீடித்ததாகவும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட புலிகள் படைகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவித்தது.

## புல்லாவெளி...

அண்மையில் படையினர் கொள்வனவு செய்த சீன, செக்கோஸ்லோவேக்கிய கவச வாகனங்களை இலகுவாக உபயோகிக்க முடியும் என இராணுவப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க குறிப்பிட்டதாக ஏ எப் பி. செய்தியாளர் தெரிவித்தார்.

## சார்க் .

இந்திய உயர் ஸ்தானிகர் எம். எல். மல்கோத்ரா கலந்து கொள்வார்.

சிறிலங்காவில் இந்தியாவின் உயர் ஸ்தானிகராக பதவி வகித்த ஜே என் டிக்ஸிற்றின் உறவுகள் சீரானதாக இருக்கவில்லையென்பதும் இந்தியாவுடன் , நல்லுறவை ஏற்படுத்த சிறிலங்கா எவ்வளவுதான் முயற்சித்தாலும் இந்தியாவின் அணுகுமுறை பெரியண்ணன் அணுகுமுறையாகத்தான் இருக்கிறது என கொழும்பு பத்திரிகையொன்று கருத்து தெரிவித்துள்ளது.

## நாலு அம்சக் கோரிக்கையே இ. தொ. காவின் கோரிக்கையும்

ஜூன் பதினேழாம் திகதி நடைபெற்ற இனப் பிரச்சினை தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டத்தில் அமைச்சர் தொண்டமான் சமர்ப்பித்த உருவக்க ஆலோசனை ஏழு தமிழ்க்குழுக்களின் நான்கு அம்சக் கோரிக்கையையே உள்ளடக்கியிருந்தது

இதை அவர் "தமிழ் அரசியல் கட்சிகளினதும் தொழிலாளர் காங்கிரஸினதுமான பொது நிலைப்பாடு" எனக் குறிப்பிட்டு சமர்ப்பித்துள்ளார் எனத் தெரியவருகிறது

## வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற வில்லை

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுக்கெதிராக ஜூன் 19 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்த எதிர்க்கட்சிகள் தீர்மானித்திருந்தபோதும் அந்த ஆர்ப்பாட்டம் திட்டமிட்டபடி நடைபெறவில்லை

இதுபற்றி மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன உட்பட பலர் தமது அதிருப்தியை தெரிவித்துள்ளனர்

சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்க மெக்ஸிக்கோ சென்றிருக்கும் வேளையில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுவதை அவரது ஆதரவாளர்களான சில பாராளுமன்றஉறுப்பினர்கள் விரும்பாததே இதற்குக் காரண... மென்று தெரியவருகிறது

## மாணவிகளே அதிகம்

யாழ் நகரில் நேற்று ந... பெற்ற பேரணியில் மாண... வே அதிகமாக க... கொண்டதாக தெரிவி... டுகிறது.

## தமிழக புலனாய்வு அதிகாரிகள் கொழும்பு வந்துள்ளனர்

ஈ. பி. ஆர் எல் எப். தலைவர் பத்மநாபா மற்றும் 13பேர் சென்னையில் கொலப்பட்டது தொடர்பாக விசாரணை மேற்கொள்ள தமிழக சிறப்பு புலனாய்வுக் குழுவின் இரு அதிகாரிகள் நேற்று விமானம் மூலம் கொழும்பு வந்துள்ளனர்.

இவர்கள் கொழும்பில் 10 நாள்கள் தங்கியிருந்து இக்கொலை குறித்த மேலதிக விவரங்கள் குறித்து ஸ்ரீலங்கா பொலிஸ் மற்றும் புலனாய்வுத் துறையினருடன் பேச்சுநடத்தவுள்ளனர்.

இந்த அதிகாரிகளுடன் இந்திய மத்திய புலனாய்வுக் குழுவைச் சேர்ந்த இரு அதிகாரிகளும் கொழும்பு வந்துள்ளனர்.

## மாணவர்களின் மகஜர் உடன் அனுப்ப முடியா நி...

நேற்று ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு யாழ் மாவட்ட பாடசாலை மாணவர் இணைப்புக்குழு எழுதிய மகஜர் யாழ் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது

செயலக வாசலில் வைத்து அரச அதிபர் க. மாணிக்கவாசகர் மகஜரை பெற்றுக்கொண்டார்

தற்போதைய சூழ்... யில் இம்மகஜரை உ... யாக ஜனாதிபதிக்கு ... வைக்க முடியாத நி... இருப்பதாகவும் ... தான் அதை அனுபி... நடவடிக்கை எடுப... கவும் அரசாங்க அதிபர் ... வர்களிடம் தெரிவித்த... 47.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 30 -06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது